# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## MCOP. No.257/2025

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 16–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பா.சந்திரகாந்தன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 17.10.2024 ஆம் தேதிய கரூர், நகர காவல் நிலையத்தில் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 29.10.2024 ஆம் தேதிய ராஜாமணியின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 27.03.2025 ஆம் தேதிய மதுரை மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் தடயவியல் மருத்துவ பேராசிரியர் அவர்களால், மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பிய பரிந்துரை கடிதம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் சான்றிட்ட

நகல் ம.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 22.10.2024 ஆம் தேதிய TN-47-AH-6802 என்ற எண்ணுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.11.2024 ஆம் தேதிய ராஜாமணியின் இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.01.2026 ஆம் தேதிய ராஜாமணியின் வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ஆம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.9. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.10. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ஆம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.11. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.12. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 ஆம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.13. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 ஆம் மனுராரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.14. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. மனுதாரர் மூவரும் அவரவர் திருணமாகி தனித்தனியே குடும்பம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் உங்கள் தாயார் அஜாக்கிரதையும் கவனக்குரையும் காரணம் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயார்

கூலி வேலைக்கு சென்று மாதம் 30000 ரூபாய் சம்பளம் வாங்கியதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் என் தாயார் சமையல் வேலை செய்தார். உங்கள் தாயாருக்கு 74 வயதானதால் அவர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு காரணம் உங்கள் தாயார் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயாரை சார்ந்து மனுதாரர் யாரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல என் தாயார் எனக்கு உதவியாக இருந்தார். நீங்கள் தான் உங்கள் தாயாரை பார்த்துக்கொண்டிருந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல என் தாயார் தான் எங்களை பார்த்துக்கொண்டிருந்தார். நஷ்ட ஈடு கேட்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.16 18:06:55 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.